# தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் – 2025/26

## "உற்பத்தித்திறன் மூலம் வளமான நாடு"

# கையேடு

*அரச துறை*

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| **1.** | அறிமுகம் | **3-4** |
| **2.** | தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் போட்டியின் நோக்கங்கள் | 4 |
| **3.** | நிறுவனங்களின் வகைப்பாடு | 4-5 |
| **4.** | விருதுகளின் வகைப்பாடு | 5 |
| **5.** | உற்பத்தித்திறன் விருதுகள் செயல்முறை விளக்கப்படம் | 6 |
| **6.** | இணைய பதிவு | 7-8 |
| **7.** | போட்டிக்கான கட்டணம் | 8 |
| **8.** | விண்ணபத்தை நிரப்புவதற்கான வழிமுறைகள் | 9 |
| **9.** | விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் | 10 |
| **10.** | நிறுவன உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான ஆலோசனை செயல்முறை | 11 |
| **11.** | விண்ணப்ப மதிப்பீட்டு செயல்முறை | 11-12 |
| **12.** | முடிவுகள் பற்றிய முறைப்பாடுகள்/ மேன்மறையீடுகள் | **12-13** |
| **13.** | விருது வென்றவர்களின் அறிவிப்பு | 13 |
| **14.** | கண்காணிப்பு அறிக்கைகளைப் பெறுதல் | **13** |
| **15.** | விருது வென்றவர்கள் பற்றிய தொடர்ச்சி | 14 |
| **16.** | அதிகாரம் | 14 |
| **17.** | மதிப்பெண் வழங்கப்படும் முறை | 15 |
| **18.** | இணைப்பு 18.1 - மாதிரி பார்கோட் படிவம் | 16 |
| | 18.2 – விண்ணப்பம் | 17-20 |

## *01. அறிமுகம்*

*நீண்டகால அபிவிருத்தி இலக்குகளை பூர்த்தி செய்வதற்காக மிகச்சிறந்த இடைத்தொடர்புடைய அகிலமொன்றின் நற்போக்கினை உறுதி செய்வதன் பொருட்டு உற்பத்தித்திறனை மேம்படுத்துவது அத்தியாவசிய கூறாவதோடு அதன்மூலம் சமூகத்தின் பல்வேறு மட்டங்களில் சமமான நிலைபேறான அபிவிருத்தி படிப்படியாக ஏற்படும். உற்பத்தித்திறன் எண்ணக்கருக்களை உள்ளடக்கிய விடயப்பரப்பானது இனிமேலும் தொழில்நுட்ப எண்ணக்கருவாக மட்டுமன்றி அவ்வெண்ணக்கருவானது நாட்டின் பொருளாதார முன்னேற்றம், நிறுவன சிறப்புத்தன்மை மற்றும் சமூக நற்போக்கு ஆகியவற்றினை வெளிப்படுத்தும் ஒரு உந்து சக்தியாக பல்வேறு விவாதங்களுக்குட்படுத்தப்பட்டு உலகளாவிய ரீதியில் தொடந்தும் இற்றைப்படுத்தப்படுத்தப்படுகிறது.*

*தற்போது கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் கீழ் நிறுவப்பட்ட தேசிய உற்பத்தித்திறன் செயலகம், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பல்வேறு துறைகளில் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை செயற்படுத்தி வருகிறது. அதன்மூலம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் தேசிய உற்பத்தித்திறன் விருதுகளுக்கான போட்டி என்பது உற்பத்தித்திறன் எண்ணக்கருக்களை மிகவும் ஆக்கப்பூர்வமாகவும் சிறப்பான நடைமுறை பயன்பாட்டிற்கு கொண்டு வரும் அரசதுறை, உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் உள்ள நிறுவனங்கள் மற்றும் பாடசாலைளை முறையாக அங்கீகரிக்கும் ஒரு போட்டித் தொடராகும்.*

*பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் மற்றும் ஒழுங்கமைப்புக்களின் வினைத்திறனை விருத்தி செய்தல் மற்றும் தொடர்ச்சியான வினைத்திறன் மேம்பாட்டு கலாச்சாரத்தை உருவாக்குதல், உற்பத்தித்திறனை அதிகரித்தல், பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தை மேம்படுத்துதல், உற்பத்தியில் இடம்பெறும் வீண்விரயங்களை கண்டறிந்து அவற்றினைத் தவிர்ப்பது, புத்தாக்கங்களை உருவாக்க ஊழியர்களை ஊக்குவித்தல், உடல் ஆரோக்கியம் மற்றும் தெளிவான மனதுடன் ஊக்கம் கொண்ட ஊழியர் குழுவினை உருவாக்குதல், தொழிலாளர் உற்பத்தித்திறனை அதிகரித்தல் மற்றும் சர்வதேச சந்தை போட்டித்தன்மையினை அணுகுதல் போன்ற பல அடிப்படை இலக்குகளை மையமாகக் கொண்டு நடாத்தப்படும் இப்போட்டித் தொடரில் பங்குபற்றும் அனைத்து நிறுவனங்களும் உற்பத்திறன் விடயப்பரப்பில் நிபுணத்துவம் கொண்ட ஒரு நடுவர் குழாத்தினால் வெளிப்படைத்தன்மையுடன் மதிப்பீடு செய்யப்படும்.*

*உள்ளூர் உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கான ஒரு அணுகுமுறையாக ஏற்றுமதி செயன்முறையினை நெறிப்படுத்தவும் வலுப்படுத்தவும், அதேபோல் உள்ளூர் தொழில் முயற்சியாண்மையாளர்களை உற்பத்தித்திறன் எண்ணக்கருக்கள் மூலம் மேம்படுத்தவும், அதன் மூலம் குடிமக்களுக்கு உயர்தர பொருட்கள் மற்றும் சேவைகளை நுகரும் திறனை வழங்குவதற்காக இந்த உற்பத்தித்திறன் விருதுகளுக்கான போட்டி அளப்பரிய ஆதரவினை வழங்குகிறது.*

*தற்போதைய அரசினால் முன்னெடுக்கப்படும் “Clean Sri Lanka” கருத்திட்டத்தில் சமூக, நன்னெறி மற்றும் சுற்றுச்சூழல் இலக்குகளை அடைவதற்கான ஒரு மூலோபாயக் கருவியாக அவ்விலக்கினை சந்திக்கும் வகையில் நடத்தப்படும் இந்தப் போட்டியின் மூலம் நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தித்திறனை அதிகரிப்பதன் மூலம் சமூகப் பாதுகாப்பினை ஏற்படுத்தல், நிலைபேறான சுற்றுச்சூழலினை உருவாக்குதல் மற்றும் மக்கள் குழுக்களிடையே அன்னியோன்ய பிணைப்புக்களை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கான வலுவான அடித்தாளத்தை உருவாக்குகிறது.*

இந்தப் போட்டியில் பங்கேற்க விரும்பும் அனைத்து நிறுவனங்களையும் ஒரு முறையான வழியின்முறை மூலம் இத் துறையில் சிறந்த நிறுவனங்களாக மாற்றும் நோக்கத்தினை முதன்மையாகக் கொண்டு, உங்களுக்குத் தேவையான உற்பத்தித்திறன் குறித்த புதிய அறிவை வழங்க தேசிய உற்பத்தித்திறன் செயலகம் முழுத் தயார் நிலையில் உள்ளது. அதன்படி, இந்த தேசிய பணியை திறம்பட முன்னெடுப்பதற்காக இந்தப் போட்டியில் பங்கேற்கும் உங்கள் அனைவருக்கும் தேசிய உற்பத்தித்திறன் செயலகம் தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

## 02. தேசிய உற்பத்தித்திறன் விருதுகளுக்கான போட்டியின் இலக்குகள்.

- அரச நிறுவனங்களில் செய்முறை கையேடுகள், நிறுவனக் கொள்கைகள், உட்புற மற்றும் வெளிப்புற அளவுகோல்களை நிறுவுவதன் மூலம் செயல்பாட்டு வினைத்திறன் மற்றும் செயல்திறனை மேம்படுத்துதல்.
- வளங்களின் பங்களிப்பு, சிறப்பான அனுபவங்களின் பரிமாற்றம், நியமங்களை அறிமுகப்படுத்துதல் மூலம் அரச நிறுவனங்களில் அறிவு மற்றும் திறன் வளர்ச்சிக்காகத் தேவையான பயிற்சி மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல்.
- கழிவு முகாமைத்துவம், எரிசக்தி காப்பு மற்றும் வளங்களை வினைத்திறனாக பாவனை செய்வதற்காக நிறுவனங்களைப் பயிற்றுவிப்பதன் மூலம், நிலைபேறான அபிவிருத்தியின் மூலம் எதிர்கால பூகோள சவால்களை எதிர்கொள்ள அரச நிறுவனங்களைத் தயார்படுத்துதல்.
- மோசடி, ஊழலைக் குறைத்தல் மற்றும் குடிமக்களுக்கு பொறுப்புணர்வுடனும் பொறுப்புக்கூறலுடனும் சேவைகளை வழங்கும் அரச நிறுவனங்களை உருவாக்குதல்.
- சிறந்த வினைத்திறனை வெளிக்காட்டும் அரச நிறுவனங்களை அடையாளம் கண்டு விருதுகளை வழங்குவதன் மூலம் அவர்களின் சிறப்புத்தன்மையினை தொடர்ந்தும் ஊக்குவித்தல்.

## 03. நிறுவனங்களை வகைப்படுத்தல்.

தேசிய உற்பத்தித்திறன் விருதுகளுக்கான போட்டியில் அரச துறையின் கீழ் விண்ணப்பிக்கக்கூடிய 7 பிரிவுகள் பின்வருமாறு.

| | |
|---|---|
| 1. அமைச்சுக்களுக்கு இடையேயானது | மத்திய அரசின் அமைச்சுக்கள் மற்றும் மாகாண பிரதம செயலாளர் அலுவலகங்கள் உள்ளடங்கும். |
| 2. மாகாண சபை அமைச்சுக்கள் | இதன் கீழ் மாகாண அமைச்சுக்கள் தவிர சபைச் செயலகங்கள், ஆளுநர் அலுவலகம் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவும் உள்ளடங்கும். |
| 3. அரச திணைக்களங்கள் | இதில் மத்திய அரசத் திணைக்களங்கள், மாகாண சபைகளின் கீழ் இயங்கும் திணைக்களங்கள், மாவட்டச் செயலகங்கள் மற்றும் திணைக்களத்தின் கீழுள்ள ஊழியர் எண்ணிக்கை 51 அல்லது அதற்கு மேற்பட்டதாக உள்ள துணை அலுவலகங்கள் ஆகியவை அடங்கும். |
| 4. பிரதேச செயலகங்கள் | |
| 5. உள்ளூரதிகார சபைகள் | |

| | |
|---|---|
| 6. சிறிய அளவிலான நிறுவனங்கள் | அமைச்சுக்கள், மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களத்தின் கீழுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை 50 அல்லது அதற்குக் குறைவான மற்றும் 05 அல்லது அதற்கு மேற்பட்ட துணை நிறுவனங்களுக்கு மாத்திரமே இதில் பங்குபெற முடியும். (ஒரு நிறுவனத்தின் கீழுள்ள துணைப்பிரிவினால் இதில் பங்குபெற முடியாது.) |
| 7. அரச நியதிச்சட்ட நிறுவனங்கள் | அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் ஏனைய நியதிச்சட்ட நிறுவனங்கள் இதன் கீழ் விண்ணப்பிக்க முடியும். |

## 04. விருதுகளை வகைப்படுத்தல்.

4.1 நிறுவனம் அமைந்துள்ள இடத்தினை ஆய்வுசெய்யும்போது பெற்றுக்கொள்ளும் புள்ளி மட்டத்தின் அடிப்படையில் நிறுவனங்களுக்கான விருதுகள் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| **பொன் விருது** | - | 900 அல்லது 900 இற்கு அதிகமான புள்ளிகள் பெறும் நிறுவனங்கள் |
| **முதலாமிடம்** | - | 850 அல்லது 850 இற்கு அதிகமான புள்ளிகள் பெறும் நிறுவனங்கள் |
| **இரண்டாமிடம்** | - | 750 – 849 இடையே புள்ளிகள் பெறும் நிறுவனங்கள் |
| **மூன்றாமிடம்** | - | 650 – 749 இடையே புள்ளிகள் பெறும் நிறுவனங்கள் |
| **விசேட திறமை** | - | 550 – 649 இடையே புள்ளிகள் பெறும் நிறுவனங்கள் |
| **திறமை** | - | 450 – 549 இடையே புள்ளிகள் பெறும் நிறுவனங்கள் |

- தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் ஆலோசனைக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த புள்ளி விதிகள் மாற்றமடையலாம்.

- முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்கள் மற்றும் விசேட திறமை மட்டத்தினை பெறும் நிறுவனங்களுக்கு விருதுகள், சான்றிதழ்களும் திறமை மட்டத்தினை பெறும் நிறுவனங்களுக்கு சான்றிதழ்கள் மாத்திரமும் வழங்கப்படும்.

### 4.2 பொன் விருது (Gold Award)

சமீபத்தைய தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் போட்டியில் முதலிடத்தையோ அல்லது பொன் விருதையோ வென்ற நிறுவனங்கள் மட்டுமே பொன் விருதுக்கு விண்ணப்பிக்க முடியும். அதன்படி, 2020 தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் போட்டியில் முதலிடத்தைப் பெற்ற நிறுவனங்கள் மட்டுமே பொன் விருதுக்கு விண்ணப்பிக்க முடியும். ஐந்து நபர்களைக் கொண்ட சிறந்த நிபுணர் குழாமொன்றின் மூலம் நிறுவனத்தின் தளப் பரிசோதனை மேற்கொள்ளப்படும். அதன் மூலம் பெறப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் பொன் விருதுகள் வழங்கப்படும்.

ஏதேனும் ஒரு நிறுவனம் பொன் விருதுக்குத் தகுதி பெறவில்லை என்றால், அந்த நிறுவனம் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் அது தரவரிசைப்படுத்தப்படும்.

### 4.3 பிளாற்றினம் விருது (Platinum Award)

தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் பொன் விருதைப் பெற்ற நிறுவனங்கள் பிளாற்றினம் விருதுக்கு விண்ணப்பிக்கலாம். இந்த விருதுக்காக குறிப்பிட்ட அளவுகோல்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு செயல்முறை நடாத்தப்படும்.

## 05. உற்பத்தித்திறன் விருதுகளுக்கான செய்முறை விளக்கப்படம்

உற்பத்தித் திறன் விருதுகள் போட்டிக்கான அறிவித்தலை விடுத்தல்

↓

உற்பத்தித் திறன் விருதுகள் போட்டிக்கான பதிவு - ஆரம்ப நிலை

↓

உற்பத்தித் திறன் விருதுகள் போட்டிக்கான அளவுகோல்கள் பற்றிய விழிப்புணர்வு (Online)

↓

பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களுக்கான நிறுவன கோரிக்கையின் அடிப்படையில் பயிற்சி அமர்வுகளை ஏற்பாடு செய்தல்

↓

மாவட்ட அளவிலான உற்பத்தித்திறன் விருதுகள் போட்டிக்கான அளவுகோல்களின் அறிவிப்பு

↓

உற்பத்தித்திறன் விருதுகள் போட்டிக்கான இணையவழி பதிவு - இரண்டாம் கட்டம்: பதிவுக் கட்டணம் செலுத்துதல் (Registration Fee)

↓

விண்ணப்பப்படிவங்களை தேசிய உற்பத்தித்திறன் செயலகத்திற்கு கையளித்தல் (Printed and soft copies)

↓

உற்பத்தித் திறன் விருதுகள் போட்டிக்காக மீளாய்வு செய்தல் – 1ஆம் கட்டம் (Desktop Evaluation)

↓

தளப் பரிசோதனைக்கு தகுதி பெற்ற நிறுவனங்களுக்கு எழுத்து மூலம் அறிவித்தல்

↓

இரண்டாம் கட்ட மீளாய்விற்காக தளப் பரிசோதனை

↓

தீர்மானம் பற்றிய புகார்கள் மற்றும் முறைப்பாடுகளை ஏற்றல்

↓

சுயாதீனமான மூன்றாம் தரப்பு மதிப்பீட்டிற்கான நிறுவனங்களைத் தேர்ந்தெடுப்பது (அதிக மதிப்பெண் பெறப்பட்ட நிலையில்)

↓

மதிப்பெண் பகுப்பாய்வு மற்றும் இறுதி முடிவுகளின் அறிவிப்பு

↓

விருது பெற்றவர்களை அறிவித்தல்

↓

உற்பத்தித்திறன் விருதுகள் விழாவை நடாத்துதல்

↓

கண்காணிப்பு அறிக்கைகளை வழங்குதல்

↓

சிறந்த அனுபவப் பகிர்வு அமர்வுகளை நடத்துதல்

↓

சுய மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெறுதல்

## *06.* இணையத்தளத்தைப் பாவித்து பதிவு செய்தல்

உற்பத்தித்திறன் விருதுகள் போட்டியின் பதிவு இரண்டு கட்டங்கள்

*01.* ஆரம்ப பதிவை நிறைவு செய்தல்
*02.* இரண்டாம் கட்டப் பதிவு,

### *6.1* ஆரம்பப் பதிவைச் செய்தல்.

இங்கே, நீங்கள் நிறுவனத்துடன் தொடர்புடைய அடிப்படைத் தகவல்களை உள்ளிட்டு, தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் போட்டிக்கான ஆரம்பப் பதிவை மேற்கொள்ள வேண்டும்.

ஆரம்ப பதிவுக்கான இணைய பதிவை முடிக்க கீழே உள்ள படிகளைப் பின்பற்றவும்.

- முதற்கட்ட பதிவை முடிக்க, மே 15, 2025 க்குப் பின்னர் www.productivity.lk ஐப் பார்வையிடவும். **Productivity Awards 2025/26** கீழே உள்ள இணைப்பில் உள்நுழையவும்.

  https://awards.npsebreeze.com/candidate-registration

*2025* ஆம் ஆண்டிலிருந்து போட்டியில் பங்கேற்கும் அனைத்து நிறுவனங்களும் மோற்குறிப்பிட்ட இணைப்பின் மூலம் பதிவு செய்ய வேண்டும் என்பதோடு மேலும் முன்னைய பதிவுகள் செல்லுபடியாக மாட்டாது என்பதை நினைவில் கொள்ளவும்.

பதிவு எண்ணுக்கான தகவல்களை உள்ளிடும்போது பின்வரும் விடயங்களைக் கவனியுங்கள்.

- நிறுவனத்தின் பெயரை சரியாகக் குறிப்பிடவும். உங்கள் நிறுவனம் தகுதி பெற்றால் சான்றிதழில் அப்பெயரே குறிப்பிடப்படும். ஆகையால் வேறுபடுத்தி அடையாளம் காண வேண்டிய சந்தர்ப்பங்களில் பிரதேசத்தினையும் குறிப்பிடுங்கள்.
- தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் போட்டிக்கு விண்ணப்பிக்கும் அனைத்து நிறுவனங்களுக்கும் ஆரம்ப பதிவு கட்டாயமாகும், மேலும் நீங்கள் பெறும் குறியீடு மற்றும் கடவுச்சொல்லின் ரகசியத்தன்மையைப் பராமரிப்பது உங்கள் நிறுவனத்தின் பொறுப்பாகும், மேலும் இறுதிப் பதிவுக்கு பணம் செலுத்தவும் இதைப் பயன்படுத்த வேண்டும். 2025/26 தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் போட்டிக்கு ஆரம்ப பதிவு செய்த நிறுவனங்களுக்கு மட்டுமே தேவையான பயிற்சித் திட்டங்கள் இங்கு வழங்கப்படுகின்றன. மேலும், போட்டி தொடர்பான தகவல்கள் மற்றும் வழிமுறைகள் இங்கு பதிவு செய்யும் நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.

6.2 பதிவின் இரண்டாம் நிலை

இங்கே, பதிவு கட்டணத்தைச் செலுத்தி, விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தில் சமர்ப்பிக்கவும்.
அதற்கேற்ப அது கிடைக்கச் செய்யப்பட வேண்டும்.

இரண்டாம் கட்டப் பதிவு செப்டம்பர் 2025 ஆரம்பத்தில் ஆரம்பிப்பதுடன், கீழே உள்ள படிகளைப் பின்பற்றவும்.

6.2.1 பதிவு எண்ணைப் பெற, www.productivity.lk என்ற வலைத்தளத்தைப் பார்வையிட்டு பின்வரும் இணைப்பைக் கிளிக் செய்யவும்.
உள்ளிடவும்.

https://awards.npsebreeze.com/candidate-registration

6.2.2 2025 இந்த ஆண்டு முதல் போட்டியில் பங்கேற்கும் அனைத்து நிறுவனங்களும் ஆரம்ப பதிவிலிருந்து பெறப்பட்ட User name & Password பயன்படுத்தி மேற்குறிப்பிட்; இணைப்பில் உள்நுழையலாம்.

6.2.3 இரண்டாவது பதிவுக்கு பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீடு கட்டாயமாகும், மேலும் பணம் செலுத்தியதற்கான விவரங்களை தயவுசெய்து சரியாக உள்ளிடவும்.

6.2.4 இரண்டாவது பதிவுக்கான சரியான தகவல்களை உள்ளிட்ட பின்னர் கிடைக்கப்பெறும் பதிவு இலக்கம் மற்றும் பார்கோட் குறியீடு / **QR** கொண்ட பக்கத்தினை விண்ணப்பப்படிவத்தின் முதற்பக்கமாக *(Cover page)* இணைக்கவும்.

## *07. போட்டிக்கான பதிவுக்கட்டணம் மற்றும் மதிப்பீட்டுக் கட்டணம்*

- *பதிவுக் கட்டணம்*

*தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் 2025/26 போட்டிக்கான பதிவுக் கட்டணம் ரூ. 2,500.00 ஆகும். இக்கட்டணத்தினை இலங்கை வங்கி, பத்தரமுல்லை கிளையின் 7040648 என்ற "பணிப்பாளர் - தேசிய உற்பத்தித்திறன் செயலகம்", கணக்கில் வரவு வைக்கப்பட்டு அத்தோடு மேலும் அப்பற்றுச்சீட்டை இலத்திரனிய பதிவிலிருந்து பெறப்பட்ட பக்கத்தில் ஒட்டப்பட்டு அனுப்பப்பட வேண்டும். காசுக்கட்டளைகள் அல்லது காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படாது என்பதை கருத்திற் கொள்ளுங்கள்.*

## *08.* விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்வதற்கான ஆலோசனைகள்

*8.1* இந்த விண்ணப்பப்படிவத்தில் உள்ள அளவுகோல்களுக்கான தகவல்கள், கருத்துக்கள் மற்றும் ஆதாரங்களை தெளிவாக முன்வைக்கவும். இங்கு தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் போட்டி மதிப்பீட்டிற்கான பொருத்தமான கால எல்லை ஜனவரி *2025* முதல் டிசம்பர் *2025* வரை செயல்படுத்தப்படும் அனைத்து வினைத்திறனான நடவடிக்கைகளாகும். எவ்வாறாயினும் கிட்டிய *2* வருடங்களில் *(2023* மற்றும் *2024)* நிகழ்த்திய நிகழ்ச்சித் திட்டங்களின் பெறுபேறுகள் *2025* ஆம் ஆண்டில் பெற்றிருப்பின் அது தொடர்பில் மதிப்பீடுகளின் போது கருத்திற்கொள்ளப்படும்

*8.2* தேவையின்போது மாத்திரம் மேலதிக தகவல்களை வழங்குவதற்காக, பிரதான பின்னிணைப்புக்களின் பின்னர் மேலதிக பின்னிணைப்புக்களைச் சமர்ப்பிக்கவும்.

*8.3* விண்ணப்பப்படிவத்தின் பக்க இலக்கங்கள் கீழ்வருமாறு வரையறுக்கப்பட வேண்டும்.

- பின்னிணைப்புக்களின்றி அதிகபட்சமாக *100* பக்கங்கள்
- பின்னிணைப்புக்கள் அதிகபட்சமாக *100* பக்கங்கள்
- எழுத்துக்களின் அளவு *(Font Size) – 11*
- பக்க இலக்கம் – வலதுபக்க மேல் மூலை
- எழுத்து வடிவம் *(Font Style)* – பாமினி *(bamini)*

*8.4* மேலதிக தகவல்களுக்கு அருகாமையிலுள்ள மாவட்ட செயலகம் / பிரதேச செயலகத்திலுள்ள உற்பத்தித்திறன் அபிவிருத்தி உத்தியோகத்தரை நாடவும். இல்லாவிடில் கீழே உள்ள தொடர்பு வழியொன்றின் மூலம் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினை தொடர்பு கொள்ளவும்.

பணிப்பாளர்
தேசிய உற்பத்தித்திறன் செயலகம்,
*10* ஆம் மாடி, செத்சிறிபாய *2*ஆம் கட்டம், பத்தரமுல்லை
தொலைபேசி *: 011 2 186030* அல்லது *011 2 186026*
தொலைநகல் *: 011 2 186025*
இணையத்தளம் *: www.productivity.lk*

## *9. விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்தல்*

*பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் ஒரு பிரதியினை மாத்திரம்* ***2026 ஜனவரி 30 அன்று மதியம் 2:00*** *மணிக்கு முன் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தில் சமர்ப்பிக்க முடியும். அவ்வாறில்லையெனில் அதற்கு முற்பட்ட திகதியொன்றில் கிடைக்கப்பெறும் வகையில் பதிவுத் தபால், விரைவுத் தபால் ஊடாக கையளிக்க முடியும். தபால் அல்லது விரைவு அஞ்சல் சேவையில் ஏற்படும் எந்தவொரு தாமதத்திற்கும் தேசிய உற்பத்தித்திறன் செயலகம் பொறுப்பல்ல என்பதும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. எவ்வாறாயினும், 2026 ஜனவரி 30 அன்று மதியம் 2:00 மணிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களுக்கு, பின்வரும் மதிப்பெண்கள் கழிக்கப்படும். ஆகையால் உங்கள் விண்ணப்பப்படிவங்களை உரிய நேரத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

- *உங்கள் விண்ணப்பப்படிவத்தின் PDF மென் பிரதியொன்றினை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதிக்குப் பின்னர் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் அறிவிக்கப்பட்ட கால எல்லையினுள் கட்டாயம் பதிவேற்றம்* (upload)*செய்ய வேண்டும். ஆரம்ப விண்ணப்பப்படிவ பரிசீலனைக்காக வன்பிரதி* (HardCopy) *தேவை என்பதால் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதிக்குள் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்திற்கு அது கட்டாயமாக கிடைக்க வேண்டும்*
- *காலதாமதமடையும் ஒரு நாளுக்கு 50 புள்ளிகள் வீதம்*
- ***5 நாட்களுக்கு மேல் தாமதமடையும் விண்ணப்பங்கள் மீளாய்விற்கு சமர்ப்பிக்கப்பட மாட்டாது.***
- *சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசாங்க விடுமுறை தினங்கள் உட்படவே நாட்கள் கணக்கில் எடுக்கப்படும் என்பதை கருத்திற் கொள்ளுங்கள்.*
- *இம் மதிப்பெண்களைக் குறைக்கும் நடவடிக்கையானது தன்னியக்க கணணி அமைப்பொன்றினால் இடம்பெறுவதால் எந்த காரணத்தினாலும் தாமதமடையும் காரணத்தினால் மதிப்பெண் குறைவடைவதை தவிர்க்க முடியாது என்பதைக் கருத்திற் கொள்ளவும்.*
- *விண்ணப்பப்படிவத்தினை தபாலில் அனுப்பும் போது சீல் வைக்கப்பட்ட கடித உறையின் மேல் "இரகசியமானது" எனவும் இடதுபக்க மேல் மூலையில் "தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் – 2025/2026 அரச துறை" எனவும் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.*

*9.2. பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்களை அனுப்பும் நிறுவனங்களின் மதிப்பெண்கள் குறைக்கப்படும்.*

*9.3. அறிக்கையினைத் தயாரிக்கும் போது அனைத்து அளவீடுகளுக்கும் பொருத்தமான கருத்துக்களை காட்ட வேண்டியதுடன், கருத்துக்கள் இல்லையெனில் அதனை வெற்றிடமாக வைக்கவும்.*

*9.4. பிழையான தகவல்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

## 10. நிறுவன உற்பத்தித்திறனை அபிவிருத்தி செய்வதற்கான ஆலோசனை செயல்முறை

தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் போட்டிக்கு விண்ணப்பிக்கும் அனைத்து நிறுவனங்களுக்கும், நிறுவனத்தின் தேவைகள் மற்றும் கோரிக்கைகளுக்கு ஏற்ப, பின்வரும் பயிற்சி வாய்ப்புகளை எதிர்காலத்தில் வழங்க எங்கள் நிறுவனம் எதிர்பார்க்கிறது.

- பயிற்சி திட்டங்கள்
- ஆலோசனை சேவைகள்
- வேலைத்தள ஆய்வுகள் மற்றும் கண்காணிக்கைகள்
- உற்பத்தித்திறன் கையேடு மேம்பாட்டுத் திட்டங்கள்
- செயல்முறை பகுப்பாய்வு மற்றும் பணிச்சூழலை எளிமைப்படுத்துதல்
- வேலைத்தள கற்கைத் திட்டங்கள்

## 11. விண்ணப்பம் மற்றும் மதிப்பிடும் செயன்முறை

மதிப்பிடும் செயன்முறை மூன்று பகுதிகளாகும். அதாவது,

- முதலாம் கட்ட மீளாய்வு– சமர்ப்பித்த விண்ணப்பப்படிவங்களை மீளாய்வு செய்தல்.

சமர்ப்பிக்கப்படும் அனைத்து அறிக்கைகளும் முதற் கட்டத்தில் ஒரு "நிபுணர் குழு" வினால் மீளாய்வு செய்யப்படும். அதன்போது தேவையான தரநிலைகளை பூர்த்தி செய்யாத அறிக்கைகள் நிராகரிக்கப்பட்டு, மீதமுள்ள அறிக்கைகளுக்கு ஆரம்ப மதிப்பெண் வழங்கப்படும். அதன்பின்னர், நிர்ணயிக்கப்பட்ட தடைதாண்டல் மதிப்பெண்களை விட அதிகமாக இருக்கும் நிறுவனங்கள், தளப் பரிசீலனைக்குத் தகுதி பெறும், அதே நேரத்தில் தடைதாண்டல் மதிப்பெண்களுக்குக் கீழே இருக்கும் நிறுவனங்கள் போட்டிக்கு தகுதி பெற மாட்டாது. அறிக்கையினைப் பூர்த்தி செய்யாத பட்சத்தில், நிறுவனம் அடைந்த முன்னேற்றத்தின் அளவைப் பொருட்படுத்தாமல், எந்தவொரு பின்னர் மேற்கொள்ளும் மதிப்பீட்டையும் தேசிய உற்பத்தித்திறன் செயலகம் முன்னெடுக்காது என்பதால், அனைத்து தகவல்களும் அறிக்கையில் சேர்க்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் மேற்கொள்ளவிருக்கும் பணிகள் அறிக்கையில் சேர்க்கப்படக்கூடாது என்பதோடு தற்போதைய நிலைமை மட்டுமே அறிக்கையில் சேர்க்கப்பட வேண்டும்.

- இரண்டாம் கட்ட மீளாய்வு– வேலைத்தளப் பரிசோதனை

இதற்காக தகுதிவாய்ந்த நிறுவனங்களைச் சேர்ந்த நிபுணர் குழுவொன்றினால் தளப் பரிசோதனை நடாத்தப்பெற்று இறுதி மதிப்பெண்கள் வழங்கப்படுகிறது. பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் விருது வென்றவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதோடு, அமைச்சின் செயலாளர் தலைமையிலான தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் போட்டி ஆலோசனைக் குழுவின் முடிவே இறுதியானது.

குறிப்பு - ஆரம்ப மீளாய்வின் போது விருதுகளுக்கு விண்ணப்பித்த நிறுவனங்கள் பெற்றுக்கொள்ளும் மதிப்பெண்களின் அடிப்படையில் அமைவிட சோதனைக்கான மதிப்பெண் எல்லை தீர்மானிக்கப்படும். இந்த ஆய்வின் முதன்மை நோக்கங்களாவது விண்ணப்பம் மற்றும் அறிக்கையில் உள்ள தகவல்களைச் சரிபார்ப்பதும், அறிக்கையினை மீளாய்வு செய்யும் போது எழும் சிக்கல்கள் மற்றும் விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்குமேயன்றி நிறுவனங்களை முழுமையாக ஆய்வு செய்வது அல்ல. ஆகையால்

அறிக்கையில் குறிப்பிடப்படாத விடயங்களுக்கு தளப் பரிசோதனையின் போது மதிப்பெண்கள் வழங்க வேண்டிய கடப்பாடு இல்லை. எனவே, அறிக்கையில் முன்வைக்கக்கூடிய அனைத்து விடயங்களும் சேர்க்கப்படுவது அவசியம் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நிறுவன பரிசீலனையின் போது, நிறுவனத்தின் குறிப்பிட்ட குழுவினை நேர்காணல் செய்யவும் அறிக்கையில் உள்ள தகவல்களின் உண்மைத்தன்மையினை உறுதிப்படுத்த சான்றுகளும் வழங்கப்படலாம், மேலும் அறிக்கையில் சேர்க்கப்படாத நிறுவனத்தின் இறுதி நேர சந்தர்ப்ப மேம்பாடுகளுக்கு புள்ளிகளைப் பெறும் திறன் குறைக்கப்படும்.

நிறுவனங்களை தளப் பரிசோதனை செய்வதற்கு வருகை தரும் நடுவர் குழாத்திற்கு தேவையான வசதிகளை வழங்க உரிய நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். நடுவர் குழுவின் உறுப்பினர்களுக்கு எவ்வித பரிசுகளோ, பிற தனிப்பட்ட சலுகைகளோ வழங்கப்படக்கூடாது என்பதுடன் தனிப்பட்ட உறவுகள் பேணுவதும் கூடாது. மேலும் நியாயமற்ற வழிகளில் முடிவுகளைப் பெற முயற்சிக்காமல் இருப்பதிலும் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். தளப் பரிசோதனையின் போது, நடுவர் குழு முதன்மையாக நேர்காணல்களை நடத்துவதோடு, உரிய அறிக்கை மற்றும் தரவுகள் மீளாய்வு செய்யப்படும். விண்ணப்பதாரர்களுக்கு ஒரு சிறிய அறிமுக விளக்கக்காட்சியை (Presentation) நிறுவனத் தலைவரிற்கு வழங்க வாய்ப்பு வழங்கப்படும். இந்த விளக்கக்காட்சி 20 நிமிடங்களுக்குள் வரையறுக்கப்பட வேண்டும்.

- மூன்றாம் கட்ட மீளாய்வு– உள்ளக ஊழியர் மற்றும் வெளிப்புற சேவைப் பெறுநர் திருப்தி மதிப்பீடு

ஒரு மீளாய்வினால் மதிப்பீடு செய்த பின்பு உள்ளக ஊழியர் மற்றும் சேவைப் பெறுநர் திருப்திக்கு மதிப்பெண்கள் வழங்கப்படுகின்றன. இம்மதிப்பீடு நிறுவனமொன்றின் மதிப்பீட்டுக் குழுவொன்றினால் மேற்கொள்ளப்படுவதோடு உள்ளக ஊழியரின் திருப்தி மற்றும் வெளிப்புற சேவைப்பெறுநர் திருப்தி மதிப்பிடப்படும் . விருதுகளுக்கு விண்ணப்பிக்கும் நிறுவனங்கள் முதலாம் கட்ட மதிப்பீட்டிலும், இரண்டாம் கட்ட மதிப்பீட்டிலும் - தளப் பரிசோதனையிலும் அதிக மதிப்பெண்களின் அடிப்படையில் உள்ளக மற்றும் வெளிப்புற சேவைபெறுநர் திருப்தியை மதிப்பிடுவதற்கான புள்ளிகளின் எல்லை தீர்மானிக்கப்படுகிறது. இந்த மதிப்பீடு எவ்வித **முன்னறிவிப்புமின்றி** பாரபட்சமற்ற ஒரு மீளாய்வுக் குழுவினால் நடத்தப்படும் என்பதை நினைவில் கொள்ளவும்.

மூன்றாம் கட்ட மீளாய்வு உள்ளக ஊழியர் மற்றும் வெளிப்புற சேவைப் பெறுநர் திருப்தி மதிப்பீடு செய்யப்பட்டு இறுதி மதிப்பெண் வழங்கப்படுகிறது. இந்த இறுதி மதிப்பெண்களின் அடிப்படையில் விருது வென்றவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதோடு மேலும் அமைச்சின் செயலாளர் தலைமையிலான தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் போட்டி ஆலோசனைக் குழுவின் முடிவே இறுதியானதாக இருக்கும்.

## 12. முடிவுகள் பற்றிய முறைப்பாடுகள்/ மேன்மறையீடுகள்

தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் 2025/26 தளப் பரிசோதனை தொடர்பான முறைப்பாடுகள் மற்றும் புகார்கள் தளப் பரிசோதனைக்குப் பின்னரான <u>07 நாட்களுக்குள் மட்டுமே</u> ஏற்றுக்கொள்ளப்படும். தெரிவின் முடிவில் திருப்தி அடையவில்லை என்றால் அல்லது ஏதேனும் சிக்கல்கள் இருந்தால், நீங்கள் தளப் சோதனையின் போது வழங்கப்பட்ட (இரகசிய அறிக்கையை) ஆரம்ப பதிவிலிருந்து பெறப்பட்ட User name & Password பயன்படுத்தி எங்கள் வலைத்தளத்தில் உள்நுழைந்து இரகசிய அறிக்கையை (ஆன்லைனில்) சமர்ப்பிக்கவும்.

*தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் பணிப்பாளர் தலைமையிலான குழு அத்தகைய புகார்களைப் பரிசீலித்து தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்.*

*7 நாட்களுக்குப் பின்னரும், முடிவுகள் வெளியிடப்பட்ட பின்னரும் பெறப்படும் புகார்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது என்பதை இதன் மூலம் வலியுறுத்தப்படுகிறது.*

## 13. விருது வெற்றியாளர்களை அறிவித்தல்

*முடிவுகள் 2026 யூலை மாதத்திற்குள் வெளியிடப்படுவதோடு ஆகஸ்ட் மாதத்திற்குள் தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் விழாவை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.*

*வெற்றி பெற்ற நிறுவனங்களுக்கு தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தால் எழுத்துப்பூர்வமாக அது தொடர்பாக அறிவிக்கப்படும், மேலும் முடிவுகள் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் அதிகாரப்பூர்வ வலைத்தளத்திலும் வெளியிடப்படும். அது உத்தியோகபூர்வ முடிவாகும். ஏனைய அனைத்து முறைகளாலும் வழங்கப்படும் முடிவுகள் அதிகாரப்பூர்வமற்ற முடிவுகள் என்பதையும், அத்தகைய முடிவுகளுக்கு தேசிய உற்பத்தித்திறன் செயலகம் பொறுப்பல்ல என்பதையும், அவை தொடர்பான விசாரணைகளுக்கு பதிலளிக்க வேண்டிய கட்டாயம் இல்லை என்பதையும் நாங்கள் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். தேர்வு முடிவுகள் வெளியான பிறகு பெறப்படும் புகார்கள் மற்றும் முறைப்பாடுகள் மீது நடவடிக்கை எடுக்க வாய்ப்பில்லை என்பதை வலியுறுத்துகிறோம்.*

## 14. கண்காணிப்பு அறிக்கையினைப் பெற்றுக் கொள்ளல்

*தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, தளப் பரிசோதனையை நடத்திய நிறுவனங்களுக்காக தயாரிக்கப்பட்ட கண்காணிப்பு அறிக்கையை தேசிய உற்பத்தித்திறன் செயலகத்திலிருந்து பெறலாம், அதற்காக பின்வரும் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன.*

*அரச துறை 750 ரூபாய்*

*எமது இந்தச் சேவை உங்களுக்குத் தேவைப்பட்டால், தேசிய உற்பத்தித்திறன் விருது வழங்கும் விழாவின் பின்னர்* ***60 நாட்களுக்குள்*** *தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் பணிப்பாளரிடம் எழுத்துப்பூர்வ கோரிக்கையை முன்வைப்பதன் மூலம் அதைப் பெறலாம்.*

*உரிய கொடுப்பனவுகள் இலங்கை வங்கி, பத்தரமுல்ல கிளையின் "இயக்குநர் - தேசிய உற்பத்தித்திறன் செயலகம்" கணக்கு எண்* ***7040648க்கு*** *வரவு வைக்கப்பட்டு, எழுத்துப்பூர்வ கோரிக்கையுடன் பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.*

## *15. விருது வென்றவர்கள் பற்றிய தொடர்ச்சி*

*விருது வழங்கும் விழாவிற்குப் பின்னர் பங்கேற்பாளர்களை ஊக்குவிக்கவும் நிலைநிறுத்தவும் தேசிய உற்பத்தித்திறன் செயலகம் இரண்டு ஆரம்ப நடவடிக்கைகளைத் நடாத்தத் திட்டமிட்டுள்ளது.*

*15.1 சுய மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெறுதல்*

*விருதுப் போட்டியில் வெற்றி பெற்ற மற்றும் வெற்றி பெறாத அனைத்து பங்கேற்பாளர்களும், தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தால் வழங்கப்பட்ட அளவுகோல் மாதிரியின் அடிப்படையில் தங்கள் நிறுவனத்தின் சுய மதிப்பீட்டை நடத்த ஊக்குவிக்கப்படுகிறார்கள். 2028 ஆம் ஆண்டு நடைபெற உள்ள அடுத்த தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் போட்டிக்கான புள்ளிகளை வழங்கும்போது இந்த அறிக்கை பரிசீலிக்கப்படும்.*
*எந்தவொரு சாதனையையும் அடையாத நிறுவனங்கள் மற்றும் குறைந்த மதிப்பெண்களைப் பெற்ற நிறுவனங்களுக்கு ஆலோசனை மற்றும் பயிற்சி பட்டறைகளை நடத்தி, அவற்றை உயர் நிலைக்குக் கொண்டுவர பொருத்தமான கருத்துத் திட்டங்களை ஏற்பாடு செய்யவும் எதிர்பார்க்கப்படுகிறது.*

*15.2 சிறந்த அனுபவப் பகிர்வு அமர்வுகளை நடத்துதல்*

*2025/26 தேசிய உற்பத்தித்திறன் விருதுகளை வென்றவர்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளை காட்சிப்படுத்த, நேரடி மற்றும் ஆன்லைன் மூலம் சிறந்த நடைமுறைகளைப் பரிமாறிக் கொள்வதற்காக பயிற்சி/ அமர்வுகள் ஏற்பாடு செய்யப்படும். உற்பத்தித்திறன் விருதுகள் போட்டியில் பங்கேற்ற அனைத்து நிறுவனங்களும் இந்த கருத்தரங்குகளில் பங்கேற்க ஊக்குவிக்கப்படுகின்றன.*

## *16. அதிகாரம்*

*இந்தப் போட்டியானது இலங்கையில் உற்பத்தித்திறனை விருத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள ஒரே அரச நிறுவனமான தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தால் நடத்தப்படுகிறது.*
*விருது பெறுபவர்கள் மீதான மதிப்பீட்டு செயல்முறை மற்றும் முடிவுகளுக்கான ஒரே தீர்மானிக்கும் அதிகாரி தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் செயலாளரே ஆவார். இந்தப் பணிக்கான பரிந்துரைகளையும் ஆலோசனைகளையும் தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் போட்டியின் ஆலோசனைக் குழு அவருக்கு வழங்கும்.*

## 17. தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் 2025/26
### மதிப்பீட்டு அளவுகோல்கள் – மதிப்பெண் வழங்கப்படும் முறை

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 01 | தலைமைத்துவம் | 140 |
| 02 | சேவைப் பெறுநர்கள் | 120 |
| 03 | திட்டமிடல் மற்றும் உபாயவழிகள் | 80 |
| 04 | மனித வளம் | 160 |
| 05 | செயன்முறை மற்றும் அறிவு முகாமைத்துவம் | 150 |
| 06 | நிறுவனத்தின் பெறுபேறுகள் மற்றும் பெறுபேறு வழங்கும் நவீனத்துவமான திட்டங்கள்<br>நிறுவன ரீதியான பெறுபேறுகள் - *100* புள்ளிகள்<br>புத்தாக்க திட்டங்கள் *(10x25)* - *250* புள்ளிகள் | 350 |
| | ***மொத்த புள்ளிகள்*** | 1000 |

## *18.1* தேசிய மாதிரி பார்கோட் படிவம்

NATIONAL PRODUCTIVITY AWARDS

2025/26

NPS SRI LANKA

NATIONAL PRODUCTIVITY AWARD

**Reg No: P3 - 00XX**

**Department of Pensions**

**Divisional Secretariat - Colombo**

**District - Colombo**

**This barcode will be used to track your application through out the process of evaluation**

Please paste the payment slip you have used to make payments here

இணையவழிப் பதிவுக்குப் பிறகு நீங்கள் பெறும் பதிவு எண் மற்றும் *Barcode* கொண்ட பக்கத்தின் உதாரணம் மேலே காட்டப்பட்டுள்ளது. அதனை அறிக்கையின் முதற்பக்கமாக இணைக்கவும். அதற்கு மேலதிகமாக உங்களால் தயாரிக்கப்பட்ட எவ்வித முதலட்டைகளையும் முதற்பக்கமாக பாவனை செய்ய வேண்டாம்.பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் பிரதியொன்றினையும் அப்பக்கத்தின் உரிய இடத்தில் ஒட்டவும்.

## *18.2 விண்ணப்பப்படிவம் – தேசிய உற்பத்தித் திறன் விருதுகள் 2025 /26 – அரச துறை*

*அ. நிறுவனம் பற்றிய அடிப்படைத் தகவல்கள்*

*1.* நிறுவனத்தின் பெயர் *(சான்றிதழில் எழுது விதம்)*

*I.* தமிழில் ......................................................................................................................

*II.* ஆங்கிலத்தில் ......................................................................................................................

*2.* முகவரி ......................................................................................................................

......................................................................................................................

*3.* நிறுவனம் உட்படும் துறை

......................................................................................................................

*4.* நிறுவனம் அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவு.............................................................................

*5.* மாவட்டம் ......................................................................................................................

*6.* தொலைபேசி இலக்கம் ......................................................................................................................

*7.* தொலைநகல் இலக்கம்......................................................................................................................

*8.* மின்னஞ்சல் ......................................................................................................................

*9.* இணையத்தளம் ......................................................................................................................

*10.* நிறுவனத் தலைவர்

I. பெயர்

*(தமிழில்)* ......................................................................................................

*(ஆங்கிலத்தில் )* ......................................................................................................

II. பதவி

*(தமிழில்)* ......................................................................................................

*(ஆங்கிலத்தில் )* ......................................................................................................

11. ஒருங்கிணைப்பாளரின் தகவல்

I. பெயர் ..........................................................................................................................

II. பதவி ..........................................................................................................

III. முகவரி ......................................................................................................................

IV. கைத்தொலைபேசி இலக்கம் ..................................................................................

V. அலுவலக தொலைபேசி இலக்கம் ..............................................................................

VI. வீட்டுத் தொலைபேசி இலக்கம் ............................................................

12. நிறுவனம் அமைந்துள்ள வீதிக்கான வரைபடம்

கொழும்பிலிருந்து உங்களது நிறுவனத்திற்கு வரும்போது, அருகிலுள்ள பிரதான நகரத்திலிருந்து அடையக்கூடிய பாதைகளின் வரைபடத்தை (தூரங்கள் உட்பட) வரையவும்.

அருகிலுள்ள பிரதான நகரம் ............................................................................................................

பிரதான நகரத்திலிருந்து நிறுவனத்திற்கான தூரம் ..............................................Km

13. உங்கள் நிறுவனத்தினால் முன்னெடுத்த பிரதான சேவைகளைக் குறிப்பிடுக

..........................................................................................................................................................
..........................................................................................................................................................

14. கடந்த வருடத்திற்குள் சேவைகளைப் பெற்றுக்கொண்ட சேவைப் பெறுநர்களின் எண்ணிக்கை (அண்ணளவாக)

..........................................................................................................................................................................

*15.* பதவியணி ..........................................................................................................................

I. அனுமதிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை

...........................................................................................................................................................

II. தற்போது சேவையிலிருக்கும் ஊழியர் எண்ணிக்கை

...........................................................................................................................................................

*16.* நிறுவனக் கட்டமைப்பு *(Organizational Structure)*

……………………………………………………..........................

ஆ. நிறுவனம் சார் தொடர்புகள்

I. நிறுவனம் சார்ந்துள்ள திணைக்களம் அல்லது அமைச்சு

